



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மினிபியா மிட்சுமி நிறுவனத்தின் துணை நிறுவனமான NMB மினிபியா இந்தியா பிரைவேட் லிமிடெட் 1,980 கோடி ரூபாய் முதலீட்டில், 1,400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் செமிகண்டக்டர், மின் உபகரணங்கள், மோட்டார்கள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மினிபியா மிட்சுமியின் இயக்குநர் & தலைவர், கட்சுஹிகோ யோஷிடா, வணிக அதிகாரி மட்சுடா டாய்சுகே, ஆலோசனை அதிகாரி ஷிஷிடோ ஷோஜி, NMB மினிபியா இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் யமசாகி யோஹி, குழுத் தலைவர் கியோஹரா மோகா மற்றும் மேலாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏக்வஸ் (Aequs) குழுமம் 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், 7000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் சூளகிரி தொழிற் பூங்காவில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்கான தொகுப்பு அமைப்பதற்கும், விமான இயந்திரங்கள், கியர்பாக்ஸ் உபபாகங்கள் உற்பத்தி மேற்கொள்வதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஏக்வஸ் (Aequs) நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் கவுல், இகஸ் SEZ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஷ்யாம் கல்யாண், மேலாண்மை இயக்குநர் விக்ரம் அன்னப்பா, தலைமை நிதி அதிகாரி தினேஷ், பொது மேலாளர் பாலமுருகன் சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 8,400 பேருக்கு வேலைவாய்ப்பு!

# தமிழ்நாட்டில் ரூ.5,980 கோடி முதலீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பான் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சென்னை, பிப்.17 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மினிபியா மிட்சுமி நிறுவனத்தின் துணை நிறுவனமான NMB மினிபியா இந்தியா பிரைவேட் லிமிடெட் 1,980 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 1,400 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் செமிகண்டக்டர், மின் உபகரணங்கள், மோட்டார்கள் உற்பத்தி திட்டத்திற் கான புரிந்துணர்வு ஒப்பந்தமும்;**

**ஏக்வஸ் (Aequs) குழுமம் 4,000 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 7000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் - சூளகிரி தொழிற் பூங்காவில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்கான தொகுப்பு அமைப்பதற்கும், விமான இயந்திரங்கள், கியர்பாக்ஸ் உபபாகங்கள் உற்பத்தி மேற்கொள்வதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன.**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், தொழில் வளர்ச்சியில், முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. மாநிலத்தில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம், இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை மேன்மேலும் மேம்படுத்திடவும், தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**NMB மினிபியா இந்தியா பிரைவேட் லிமிடெட்**

ஜப்பான் நாட்டை சேர்ந்த மினிபியா மிட்சுமி நிறுவனம், செமிகண்டக்டர் பொருட்கள், மோட்டார்கள், சென்சார்கள், மின் சாதனங்கள் தயாரிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம் ஆகும்.

NMB மினிபியா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், மினிபியா மிட்சுமி நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இந்நிறுவனம், 1,980 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 1,400 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா ஆரிஜின்ஸ் தொழிற் பூங்காவில், பல்வகை செயல்பாடுகளைக்கொண்ட செமிகண்டக்டர்கள் உயர் மதிப்பு கொண்ட IGBTகள், (Insulated – gate bipolar transistor) ICகள் (Integrated Circuits) போன்றவற்றிற்கான முழுமையான உற்பத்தி அமைப்பை உருவாக்கவும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) மையம் அமைக்கவும் முன்மொழிந்துள்ளது. இத்திட்டத்தில் 40 சதவிகிதத்திற்கும் அதிகமாக, உயர் திறன் மிக்க பணியாட்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**ஏக்வஸ் (Aequs) குழுமம்**

ஏக்வஸ் (Aequs) குழுமம், 4,000 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 7,000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம், SIPCOT – சூளகிரி தொழிற்பூங்காவில் விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை உற்பத்தித் தொகுப்பு அமைப்பதற்கும், விமான இயந்திரம் மற்றும் கியர்பாக்ஸ் உபபாகங்கள் உற்பத்தி ஆலை அமைக்கவும் முன்மொழிந்துள்ளது. இத்தொழிற்பூங்காவில் விமான இயந்திர உபபாகங்கள் மற்றும் துல்லிய பொறியியல் தயாரிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**இந்த இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 5980 கோடி ரூபாய் முதலீட்டில் 8400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்நிகழ்ச்சிகளில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மினிபியா மிட்சுமியின் இயக்குநர் & தலைவர், கட்சுஹிகோ யோஷிடா, வணிக அதிகாரி மட்சுடா டாய்சுகே, ஆலோசனைஅதிகாரி ஷிஷிடோ ஷோஜி, NMB மினிபியா இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் யமசாகி யோஹி, குழுத் தலைவர் கியோஹரா மோகா மற்றும் மேலாளர் தமிழ்ச்செல்வன், மற்றும் ஏக்வஸ் (Aequs) நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் கவுல், இகஸ் SEZ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஷ்யாம் கல்யாண், மேலாண்மை இயக்குநர் விக்ரம் அன்னப்பா, தலைமை நிதி அதிகாரி தினேஷ், பொது மேலாளர் பாலமுருகன் சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கிண்டி கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கத்தில் நடைபெற்ற "கலைச்சங்கமம்" கலை விழாவில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் விழாவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கிய கிராமியக் கலைஞர்களுக்கு நினைவுப் பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். விழாவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு மகேஷ்குமார், ஆலந்தூர் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் ப.குணாளன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் “வெல்லும் சிறுபான்மையினரின் உரிமைக்குரல்” மாபெரும் கருத்தரங்கம்!

**டாக்டர் அ.சுபேர்கான் ஏற்பாடு!**



சென்னை, பிப்.17-

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி கழக சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் “வெல்லும் சிறுபான்மையினரின் உரிமைக்குரல்” மாபெரும் கருத்தரங்கம் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் கழக செய்தித் தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக அயலக அணிச் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா மற்றும் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி சந்தானம் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையாற்றிய சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் சுபேர்கான் பேசுகையில் சிறுபான்மையின மக்களுக்கும் திராவிட முன்னேற்ற கழகத்திற்குமான தொடர்பு பேரறிஞர் அண்ணா தொடங்கி இன்றுவரை ஊண் பொதிந்த நாகமாக பிரிக்க இயலா ஒன்றாகும் என்று தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறுபான்மை யின மக்களின் நலனுக்காக தீட்டிய திட்டங்களான, பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென தனியே 3.5 சதவீத உள் இட ஒதுக்கீடு. சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாத்திடும் வகையில் சிறுபான்மையினர் நல ஆணையம். உலாமாக்கள் பணியாளர் நல வாரியம். உபதேசியர் நல வாரியம். முஸ்லீம் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் முதலிய பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டதுடன்.

முதல்வர் அவர்களால் தான் சிறுபான்மையினர் நல திட்ட குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழகம் முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் பல்வேறு கோரிக்கைகளை முதல்வர் அவர்களிடத்தில் சமர்பித்ததாகவும், அக்கோரிக்கைகள் அனைத்தையும் இன்முகத்துடன் கேட்ட முதல்வர் அவர்கள், தாயுள்ளத்துடன் நிறைவேற்றியிருப்பதாகவும் பெருமிதத்துடன் கூறினார்.

கடந்த மாதம் நடைபெற்ற மாநாட்டில் வக்பு வாரியத்தில் பதிவுபெற்ற உலமாக்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பூதியம், குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு, உலமாக்கள் இரு சக்கர வாகனம் வாங்க ரூபாய் ஐம்பதாயிரம் தமிழ்நாடு அரசு மானியம், அரசு உருது பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடம் நிரப்பப்படும், அரசு சார்பில் அனைத்து மாவட்டம் மற்றும் மாநகராட்சிகளிலும் கல்லறை மற்றும் கபரஸ்தான் அமைக்கப்படும் மற்றும் சென்னை மற்றும் மதுரையைத் தொடர்ந்து கோவையிலும் வக்ப் தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்ற முதல்வரின் பல்வேறு அறிவிப்புகளை சுட்டிக் காட்டியதுடன் சிறுபான்மையின மக்களின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கும் தலைவர். மீண்டும் முதல்வராக சிறுபான்மையின மக்களாகிய நாம் அனைவரும் ஓரணியில் நிற்போம் என்றார்.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வந்த கல்வி, மருத்துவம், பொருளாதாரம், ஊடகம், சமூக நல இயக்க செயல்பாட்டாளர்கள், உலமாக்கள், பேராயர் மற்றும் கலை இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் தங்களின் கருத்துக்களை தெரிவித்ததனர்.

இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில துணைச் செயலாளர்கள் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு.சபீல் கான், ரபி அகமது, அன்வர் அலி, ராபர்ட் ராஜதுரை மற்றும் பல்வேறு அமைப்பின் பிரதிநிதிகள் நோபல் சாகுல் அமீது, கிரசென்ட் பல்கலைக்கழக தாளாளர் அகமது புகாரி, மேனாள் நீதியரசர் அக்பர் அலி, மற்றும் பேராயர்கள் கே.பி.எடிசன், மோகன்தாஸ் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று நிகழ்வினை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியாக கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில இணைச்செயலாளர் சி.ஜெரால்டு அவர்கள் நன்றியுரையாற்றினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 362 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை, பிப்.17-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 362 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (16.2.2026), திரு.வி.க.நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 74அ, சந்திரயோகி சமாதி சாலை, வட்ட செயலாளர் அலுவலகம் அருகில், ஓட்டேரி. 2) வட்டம் 71, நெல் வயல் சாலை, பெரம்பூர், ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப. தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, திரு. வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா. ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். தமிம், பொல்லு டி.சுரேஷ் குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா. பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் : சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம.அசோக்கு மார், L.சம்பத் குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*